# நுவரகம்பலாத கிழக்கு பிரதேச சபை
# அநுராதபுர மாவட்டம்

## 1 நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 யூன் 02 ஆம் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 யூன் 07 ஆம் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள கலென்பிந்துனுவெவ பிரதேச சபையின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சபையினால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் தொடர்பான பொழிப்பொன்று கீழே காட்டப்பட்டுள்ளது.

| | குறைபாடுகளின் தன்மை | விடயங்களின் எண்ணிக்கை | நிதிக்கூற்றுக்கள் மீதான தாக்கம் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | வருமானம் | செலவினம் | சொத்துக்கள் | பொறுப்புக்கள் |
| | | | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| (அ) | நிதிக்கூற்றுகளிலிருந்து விடுபட்டவை | 01 | 1,131 | - | - | - |
| (ஆ) | நிதிக்கூற்றுகளில் குறைத்துக் காட்டுதல்கள் | 01 | 62 | - | - | - |
| | - மேற்படி - | 01 | - | 148 | 148 | - |
| | - மேற்படி - | 01 | - | - | - | |
| (இ) | நிதிக்கூற்றுகளிலிருந்து விடுபாடுகள் | 05 | - | - | - | 2,999 |
| (ஈ) | நிதிக் கூற்றுக்களில் பொருத்தமற்ற வெளிப்படுத்தல்கள் | 14 | - | - | - | 5,209 |

**1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

05 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 19,965,664 ஆக இருந்ததுடன், புத்தகங்கள்/அறிக்கைகளின் பிரகாரம் அத்தகைய கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 61,876,255 ஆக இருந்தது.

**1.3.3 தெளிவுபடுத்தப்படாத வித்தியாசங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பிரதேச சபை கணக்கீட்டு முறைமையின் பிரகாரம் காணி மற்றும் கட்டிடங்கள் தவிர நிலையான சொத்துக்களின் கூட்டுதொகை மூலதனப் ஈடுபாட்டிற்கான வருமானப் பங்களிப்புக் கணக்கின் மீதிக்கு சமமாக இருக்க வேண்டிய போதிலும், 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலையான சொத்துக்களின் பெறுமதி ரூபா 6,028,071 தொகையாகவும் மூலதனப் ஈடுபாட்டிற்கான வருமானப் பங்களிப்புக் கணக்கின் மீதி ரூபா 13,023,206

ஆகவும் இருந்தமையால் அக்கணக்குகள் இரண்ற்கிடையே ரூபா 6,995,135 தொகையான வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2010 திசெம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு காசேட்டுப் பொழிப்பின் பிரகாரம் 1471897 ஆம் இலக்க பொதுக் கணக்கு மீதி ரூபா 16,746 ஆகவும் நிர்மாண வேலைகளுக்கான கணக்கு மீதி ரூபா 386,757 ஆக இருந்தும் அதனை ஐந்தொகையில் முறையே ரூபா 36,558 ஆகவும் ரூபா 405,520 ஆகவும் வெளிப்படுத்தியிருந்த போதும் அதற்கான காரணம் தெளிவுபடுத்தப்படவில்லை.

### 1.3.4 செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட செலுத்த வேண்டியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 2,505,934 ஆக இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஓய்வூதியத் திணைக்களத்திற்குச் செலுத்த வேண்டிய உள்ளூராட்சி சேவை பங்களிப்புப் பணம் ரூபா 639,537 ஆனது கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்த போதிலும் பங்களிப்புப் பணம் செலுத்த வேண்டிய உத்தியோகத்தர்களின் விபரங்கள் மற்றும் பிரதேச சபையின் கடமையாற்றிய காலங்கள் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 24,953,172 கூட்டுத்தொகையான 13 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாகச் சான்றுறுதிப்படுத்த / மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது.

## 2 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பிரதேச சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 883,004 ஆக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,746,506 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் மீளாய்வாண்டின் பொருட்டும் முன்னைய ஆண்டின் பொருட்டும் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப் பட்ட | உள்ளவா றான | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை | மதிப்பி டப்பட்ட | உள்ள வாறான | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (i) | வீதவரியும் வரியும் | 425 | 425 | - | 404 | 404 | - |
| (ii) | வாடகை | 430 | 491 | 115 | 448 | 319 | 129 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 170 | 170 | 07 | 104 | 97 | 07 |
| (iv | ஏனைய வருமானம் | 12,600 | 12,942 | 15,698 | 3,580 | 2,724 | 18,682 |

#### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணம்

வெவ்வேறு கட்டளைச் சட்டத்தின் கீழ் இரண்டு நீதிவான் நீதிமன்றங்களினால் 2010 திசம்பர் 31 வரை அறவிடப்பட்டு பிரதம செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ள ரூபா 3,052,968 ஆன தண்டப்பணம் சபைக்கு கிடைக்க வேண்டியுள்ளது.

### 2.2.3 முத்திரைக் கட்டணம்

2010 திசம்பர் 31 இல் உள்ளவாறு பதிவாளர் நாயகத்திடமிருந்து ரூபா 624,820 தொகையான முத்திரைக் கட்டணங்கள் கிடைக்க வேண்டியுள்ளது.

### 2.2.4 வீதவரிகள்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 134(1) ஆம் பிரிவின் பிரகாரம் பிரதேச சபை அதிகாரசபைக்குட்பட்ட அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேுசங்களாக இனங்காணப்பட்ட 06 பிரதேசங்களுக்காக வீதவரி விதிக்கப்பட்டு அறவிடக் கூடிய வகையில் முன்னேற்றமடைந்த பிரதேசங்களாக அறிவிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான சபையின் பாதீடு செய்யப்பட்டதும் உள்ளவாறான செலவினமும் உரிய முரண்களுடன் கீழே காட்டப்பட்டுள்ளது.

| செலவின விடயம் | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| | பாதீடு செய்யப்பட்டது | உள்ளவாறான | முரண் | பாதீடு செய்யப்பட்டது | உள்ளவாறான | முரண் |
| மீண்டுவரும் செலவினம் | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| ஆளணி வேதனம் | 7,077 | 8,299 | (1,222) | 7,129 | 1,857 | 5,272 |
| ஏனையவை | 10,099 | 6,612 | 3,487 | 6,251 | 6,279 | (28) |
| உப மொத்தம் | 17,176 | 14,911 | 2,265 | 13,380 | 8,136 | 5,244 |
| மூலதனச் செலவினம் | 25,525 | 6,813 | 18,712 | 26,900 | 31,073 | (4,173) |
| மொத்தம் | 42,701 | 21,724 | 10,977 | 40,280 | 39,209 | 1,071 |

## 2.4 மனித வள முகாமைத்துவம்

### 2.4.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவி அணி

(அ) 2010 திசெம்பர் 31 இல் சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவி அணி மற்றும் உள்ளவாறான பதவி அணி தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | பதவியினர் தரங்கள் | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளவாறான |
|---|---|---|---|
| (i) | பதவி நிலைத்தரங்கள் | 01 | 01 |
| (ii) | இரண்டாம்தரங்கள் | 02 | 05 |
| (iii) | ஆரம்ப தரங்கள் | 12 | 12 |
| (iv) | வேறு (அமைய / தற்காலிக) | - | 09 |
| | மொத்தம் | 15 | 27 |

(ஆ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த எல்லையை விஞ்சி சேர்க்கப்பட்டிருந்த 12 பேர்களுக்காக மீளாய்வாண்டினுள் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளாக ரூபா 1,426,596 சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

## 2.5 சொத்துக்களின் முகாமைத்துவம்

### 2.5.1 பெறவேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 20,768,528 ஆக இருந்தது. 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட கணக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 5,949,013 ஆக இருந்தது.

### 2.5.2 அறவிடப்படவேண்டிய ஊழியர் கடன்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,113,713 ஆக இருந்ததுடன், 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட அறவீடுகள் நிலுவையாக இருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 83,418 ஆக இருந்தது.

### 2.5.3 மெய்மையாய்வு செய்யப்படாத சொத்துக்கள்

பௌதீக பரிசோதனை / மெய்மையாய்வுச் சபை அறிக்கை மூலம் உறுதிப்படுத்தப்படாத 2010 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு புத்தகப் பெறுமதி அடிப்படையில் கணக்கிடப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 29,419,489 ஆக இருந்தது.

### 2.6 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுப்பனவுகள்

அதிகாரப் பிரதேசத்தில் உரிமை மாற்றப்படுகின்ற காணிகளின் அடிப்படையில் பதிவாளர் நாயகத்தினால் அறவிடப்படுகின்ற முத்திரைக் கட்டணங்களில் ஒரு பகுதி பிரதேச சபைக்குக் கிடைத்திருந்ததுடன் அதில் 1% ஆன ரூபா 27,500 தொகை இரண்டு உத்தியோகத்தருக்கு கொடுப்பனவொன்றாகச் செலுத்தப்பட்டிருந்த போதிலும் அக் கொடுப்பனவிற்காக விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

### 2.7 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

(அ) மீளாய்வாண்டின் போது சபையினால் பராமரிக்கப்பட்டுச் சென்ற கன்றுகள் நடும் செயற்திட்டற்காக உள்ளூராட்சி ஆணையாளரிடமிருந்து கிடைத்திருந்த நிதி ஏற்பாடுகளில் 1447 கன்றுகளுக்காக ரூபா 535,390 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக 2011 மார்ச் 10 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) உரிய கன்றுகளின் எண்ணிக்கைகளில் 1447 கன்றுகளும் பகுதிகளில் தெரியக்கூடிய வகையில் இல்லாமலும் உரிய முழுத் தூரமான 13 கிலோ மீற்றரிலுமான எண்ணிக்கை அளவு 150 கன்றுகளுக்கும் குறைவான அளவு மாத்திரம் காணப்பட்டது.

(ii) மதிப்பீட்டின் பிரகாரம் குழிகள் வெட்டி கன்றுகள் நட்டி கம்பினால் கூடுகட்டி பாதுகாத்தல் மற்றும் 03 மாதங்கள் பராமரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அறிவுறுத்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) கொடுப்பனவைச் செய்கின்ற போது உரிய கன்று 03 மாதங்கள் பராமரிக்கப்பட்டதன் பின்னர் கன்றுகளைக் கணக்கெடுத்துப் பார்த்து அதன் பிரகாரம் கொடுப்பனவு செய்ய வேண்டியிருந்த போதிலும் கன்று நடப்பட்டு பூர்த்தியடைந்த உடனேயே கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(iv) மொத்தக் கன்றுகளும் நடப்பட்டமைக்கு தொழில்நுட்ப உத்தியோகத்தின் அறிக்கையொன்று காணப்படவில்லை.

(ஆ) கீரிக்குளம் கிரவலுள்ள காணியில் கிரவல் மண் வெட்டுவதற்காக 01 கியூப் ஒன்றிற்கு ரூபா 85 படி சபைக்கு அறவீடு செய்வதற்கு சபை தீர்மானம் எடுத்து 15 வருடங்களாக வருமானம் பெறப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிலிருந்து அவ்வருமான அறவீட செய்தல்கள் நிறுத்தப்பட்டிருந்தது.

(இ) 2009 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு உரிய பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் நெலுபேவ பொது நூலகத்தில் 137 புத்தங்கள் குறைவுக்கு பொறுப்பானவர்களை இனங்கண்டு பணத்தினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதி இல. 29 இன் பிரகாரம் சேகரிக்கப்படுகின்ற பணம் தினந்தோறும் வங்கியில் வைப்புச் செய்யப்பட வேண்டிய போதிலும் 2007 மற்றும அதற்கு முந்திய வருடங்களில் சேகரிக்கப்பட்டிருந்தும் வங்கியில் வைப்புச் செய்யப்படாத ரூபா 30,818 அன பணத்தை உரிய பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரிடமிருந்து அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.8 செயலாற்றல்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 03 ஆவது பிரிவின் பிரகாரம் பிரதேச சபை அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தின் மக்களின் வசதிகள், நலன்புரி செயற்பாடுகள் மற்றும் சுகாதாரம், பாதைகள் மற்றும் பொது வீதிகள் பொதுப் பயன்பாடு சேவைகளுக்குரிய செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக எதிர்வரும் வருடங்களின் செயற்பாடுகளுக்குரிய திட்டங்களை உள்ளடக்கிய கூட்டுத்திட்டமொன்றையும் அத்திட்டத்தினை மீளாய்வாண்டில் அமுல்படுத்தப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.8 ஒப்பந்த நிர்வாகம்

எஸ்சீஏ/1 ஆம் இலக்க இக்டாட் வெளியீட்டுக் கோவையின் 56 ஆம் பிரிவின் பிரகாரம் ஒப்பந்தத்திற்காக கொடுப்பனவை மேற்கொள்ளும் போது குறிப்பாக அளவிடக்கூடிய வகையில் பெற்றுக்கொள்ளப்பட்ட அளவீட்டின் பிரகாரம் அன்றி இயந்திர மணித்தியாலயத்திற்காக கொடுப்பனவு மேற்கொள்ள முடியாத போதிலும் மாகாண நிச்சயிக்கப்பட்ட அபிவிருத்தி மானியத்தின் கீழ் செய்யப்பட்ட 10 வீதி அபிவிருத்தி செயற்திட்டங்களுக்கு அவ்வாறு அளவீட்டினை மேற்கொள்ளாமல் இயந்திர மணித்தியாலத்தினை மட்டும் அடிப்படையாகக் கொண்டு ரூபா 2,539,059 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 2.9 ஒப்பந்த நிருவாகம்

மாகாணப் பொறியியலாளர் திணைக்களத்தின் நிலைமைக் கட்டுப்பாட்டு பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 287,070 ஆன 4 ஆம் வாய்க்காலிலிருந்து நாகவிகாரை வீதிக்கு கொங்ரீட் இடும் வேலைகள் நிர்மாண நியமங்களுக்கு இணங்காதிருந்தமை அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் அக்குறைபாடுகளை சீர் செய்யாமல் உரிய ஒப்பந்தகாரருக்கு ரூப 198,786 தொகை மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது.

## 2.10 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தில் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு